
ஒரு பனிமலை
பயங்கரம்!
லயன்
காமிக்ஸ்
ரூ.3/-

விரைவில் வருகிறது !

# மாய மாளிகை !




ரிப் கிர்பியின் புதிய
சாகஸம் !

ரூ. 3/-

# ஹாட் - லைன்!

வாசக நண்பர்களே,

தொடரும் பக்கங்களில் மிகவும் வித்தியாசமானதொரு கதை உங்களுக்குக் காத்திருக்கிறது. வெளி கிரகத்திலிருந்து வரும் ஜந்துக்களைப் பற்றிய கதைதான் என்றாலும் பத்தோடு பதினொன்று ரகமல்ல இது! நிகழ்காலமும், எதிர் காலமும் சந்திக்கும் ஒரு பாலம் இது!

கதையின் ஹீரோவான காரிகனை இம்முறை ஒரு சராசரி மனிதனாய்- நட்பு, காதல், சோகம் என்ற பல உணர்வுகளுக்கு அடிமையாகும் சராசரி மனிதனாய் பார்க்கப் போகிறீர்கள்!

இந்தக் கதையை நான் மிகவும் ரசித்தேன்! படித்துப் பார்த்து விட்டு உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்களேன்!

அடுத்த மாதம் சூப்பர்-கௌபாய் **டெக்ஸ் வில்லர்** **"பழி வாங்கும் புயலா"**க உங்களை சந்திக்கப் போகிறார். இதழின் விலை ரூ. 6/- படிக்கத் தவறாதீர்கள்!

அன்புள்ள,

எஸ். விஜயன்

ஆசிரியர்.

அனைவருக்கும்
புத்தாண்டு + பொங்கல்
வாழ்த்துக்கள்!


காரிகன் சாகஸம்!
ஒரு
பனிமலை
பயங்கரம்!
லயன்
காமிக்ஸ்



பணி ஒன்றை முடித்துக்கொண்டு திரும்பிய காரிகனை சுமந்து வந்த அந்த விமானம் வாஷிங்டன் வந்தடைந்தது-
மறுநாள்-காரிகன் தலைமையகம் சென்ற போது-
பாராட்டுக்கள்!
நீ ஈட்டிய வெற்றி மகத்தானது காரிகன்! ஒரு பெரிய கயவர் கும்பலே வேரறுக்கப்பட்டு விட்டது-
நான் என் கடமையைத் தானே செய்தேன்!
அதே சமயம்-அருகிலிருந்த ஆய்வு கூடத்தில்-
ஸ்க்ரீரீரீ....
சேச்-சே! இதென்ன கர்ண கொடூரமான இரைச்சல்! அந்த கிழட்டு புதைபொருள் ஆய்வாளர் அனுப்பி வைத்த டேப்தானே இது? நமக்கு இதில் என்ன வேலை இருக்க முடியும்?
கொஞ்சம் கவனமாக கேளுங்கள் ஸார்-புரியும்!
கிரீரீரீ!
அ:டென்-அதை நிறுத்தித் தொலை! என் செவிப்பறை கிழிந்துவிடும் போலிருக்கிறது!
இந்த காட்டு இரைச்சல் பின்னணி ஒரு பழைய தந்திரம் ஸார்?
பின்னணி ஓசையை மட்டுப் படுத்துகிறேன்-இப்போது கேளுங்கள்!
கிரீரீரீ...


அல்லது -
வாஸ்தவம்தான்! ஆனால் யாருக்காவது இது புரியுமா என்ன?
ஸ்லாவிக் ஸார்!
உச்சவேகத்தில் பதிவுசெய்யப் பட்டிருக்கிறது ஸார் - புரியக் கூடாது என்ப
தற்காக! ஆனால் நம்மிடம் வசதி இருக்கிறது ஸார் - இதை புரிந்துகொள்ள!
பனிமலை உச்சியில் சிதோ
நிலை பற்றி ஆராய்ந்து
வரும் ஷெர்பாக்களின் டேப்
அருகே புதை
பொருள் ஆய்வு நடத்தி
வரும் புரபஸரிடம் சிக்கி
யிருக்கிறது - அனுப்பி
வைத்துள்ளார்.
சரி - மீண்டும் ஓடவிடு!
கடைசி வார்த்தைகளை கவனியுங்கள் -
''யாரோ வருகிறார்கள் பாரு! யாரது?'' - அதைத் தொடர்ந்து -
''என்ன - என்ன இவை?'' என்று கூச்சலிடுகிறான் - மரண பீதியில்!
அப்புறம்?
அவ்வளவுதான்! வேறு எந்த சப்தமும் பதிவாகவில்லை!
செயற்கை கோள் மூலம் அப்பகுதியை ஆராய்ந்ததில் முகாம் முழுவதுமாக தடயமின்றி மாயமாக மறைந்து விட்டது தெரிய வந்துள்ளது -



அப்போது முதல் மாஸ்கோவினர் மணிக்கு ஒரு தடவை "முகாம்-9- எங்கே இருக்கிறீர்கள்? பதில் கொடுங்கள்" என்று ஒலிபரப்பு செய்து வருகிறது!
எனக்கென்னவோ ரஷ்யக் குழுவினர் தற்சமயம் இப் பூமியிலேயே இல்லையோ என்று தோன்றுகிறது!
அட்டென்! ஆரம்பம் முதல் கோர்வையாக சொல்- பிரச்னை என்ன என்று!
சரி- ஸார்!
தென் அமெரிக்காவில் உள்ள மிக உயர்ந்த பனிமலை ஒன்றின் உச்சியில் தென்படும் விநோத மான காட்சிகள் பற்றி ஆராய புரபஸர் கிரீனிச் தன் மகளு டன் அங்கே சென்றிருக்கிறார்.
இவர்களிருவரும் இப்போது பத்திரமாக இருக்கிறார்களா?
இந்த நிமிடம் வரை பத்திர மாகத்தான் இருக்கிறார்கள்!
அதாவது- அவர்களுக்கு எந்தவிநாடியிலும் ஆபத்து வரலாம் என்கிறாயா?
ஆமாம் ஸார்! வெளி நாட்டு நண்பர்களுக்கு நேரிட்ட புதிரான அசம்பாவிதத்திற்கு இவர்களும் ஆளாகும் அபாயமுண்டு!
நீ அப்படி சொல்லக் காரணம்!
டேப்பின் கடைசி வார்த்தைகளை கவனியுங்கள்!



சர சர வென்று கேட்கும் ஓசை ஏதோ ஒரு அந்நிய மொழி என்றுநம்வல்லு னர்கள்சொல்கி றார்கள்-
ஆனால் அது யாருமே அறியாத மொழி! குரலும் மனிதர்களு டையது அல்ல!
பின்னே? பனி மலை பூதத்தின் குரலா-?
அல்லது-அயல் கிரகவாசிகளு டையதா?
இப்போதைக்கு எதையும் உறுதி யாக சொல்ல முடியவில்லை ஸார்!
அங்கே பனிமலை உச்சியில்-
!
வேடிக்கையான கதைதான் போ! சரி-உண்மையை நாம் எப்படி தெரிந்து கொள்ளப் போகிறோம்?
பிரச்னை இன்ன தென்று ஆரா-ய்ந்து வர ஓர் உளவாளியை உடனடியாக நாம் அங்கே அனுப்பி வைப்பது ஒன்று தான் வழி ஸார்?
டாடி-நீங்கள் அனுப்பி வைத்த டேப்பை உள-வுத் துறையினர் அலட்சியப்படுத்திவிட மாட்டார்களே?
இல்லை-லின்! யாரையோ அனுப்பி வைப்பதாக உறுதி கூறியிருக்கிறார்கள்!
ப்பூ! மலையடிவாரத்திலிருக் கும் நம்வேலைக்காரர்களிடம் ''விசாரித்து'' விட்டு-எல்லாம் கட்டுக் கதைன்னு போய் ரிப்-போர்ட் கொடுத்துவிடுவான்!
அப்படியில்லை லின்! நிச்சய மாக ஒரு பொறுப்பான நபரைத்தான் அவர்கள் அனுப்பி வைப்பார்கள்!
அந்த நபர்-
கிரிங்!


வாஷிங்டனில்-
காரிகனா? தலைவர் பேசுகிறேன்!
உடனடியாக C.I. ஆய்வு கூடத்திற்குப் போ! பறக்கும் தட்டு சமாச்சாரம் போல் ஏதோ ஒரு பிரச்னை உனக்காக காத்திருக்கிறது அங்கே!
பின்னர்-ஆய்வு கூடத்தில்-
இதுதான் அந்த டேப்-காரிகன்! பின்னணியில் கேட்கும் குரல் மனித குரலே இல்லை என்று அடித்துச் சொல்கிறார்கள் நம் மொழி வல்லுனர்கள்!
ரோபோவின் குரலாக இருக்கலாமில்லையா?
ஆனால் பூமியின் எந்த மூலையிலும் பேசப்படாத அந்நிய மொழி இது!
இவை-செயற்கை கோள் பிடித்த புகைப்படங்கள்-தெளிவாக இல்லையாதலால் எதையுமே தெரிந்து கொள்ள முடியவில்லை!
உன்னை அங்கே கொண்டுபோய் தரையிறக்க ஏற்பாடு செய்கிறோம்!
அங்கே-பனி மலையில்-
இங்கே வரும் உளவாளி ஆரெனை தேடிக் கண்டுபிடிக்க சம்மதிக்க மாட்டான்-
வேண்டாம்! அது என்னுடைய பிரச்னை! அவர் எங்கோ இன்னமும் உயிரோடுதான் இருக்கிறார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது!
அந்த ஆராய்ச்சி முகாம் ஒட்டு மொத்தமாக தடயமின்றி மாயமாக மறைந்துவிட்ட நிலையில் உனக்கு இன்னமும் நம்பிக்கை இருக்கிறதா என்ன?
ஆமாம்-டாடி!
அப்படியானால் அங்கிருந்தவர்கள் எல்லோரும் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்று நீ நினைக்கிறாய்?
முகாம் இருந்த இடத்தில் இப்போது மண்டிக் கிடக்கும் பனிமூட்டத்தின் உள்ளேதான் உங்கள் கேள்விக்கு விடை இருக்கக் கூடும்-டாடி!


அங்கே-
இம்மாதிரி புதிரான விவகாரங்களை நிறைய நீங்கள் கையாண்டிருப்பதனால் உங்களை அனுப்பச் சொல்லிக் கோரி-னோம் காரிகன்!
புரபஸரின் முகாம் அருகே பாரசூட்டில் உங்களை தரையிறக்கப் போகிறோம்!
அதைத் தொடர்ந்து-
இந்தசங்கேதசெய்தி இப்போதுதான் ரேடியோவில் வந்தது டாடி!
உளவாளி- நள்ளிரவு 2 - மணிக்கு- பாரசூட் மூலம்!
இச்செய்தி எதிரிகளையும் எட்டியிருந்தால் வருகிறவர் ஆபத்தில் மாட்டிக் கொண்டுவிடுவார் இல்லையா?
காரிகன் புறப்பட ஆயத்தமானார்-
நூதன ஆயுதங்கள் சிலவற்றை நீ கை-யோடு எடுத்துப் போவது நல்லது!
புது வகை ஆயுதங்கள் சிக்கலானவை-கற்றுக் கொள்ள அவகாசம் இல்லை-இன்ப்ரா-ரெட் லைட் கருவி மட்டும் போதும்!
குதியுங்கள் இங்கே- பத்திரமாக இலக்கை அடைய வாழ்த்துக்கள்!
நன்றி!
கீழே பாதாள உலகம் போல் ஒரே கும்மிருட்டு! இந்த இன்ப்ரா-ரெட்லைட் கருவி கைவசம் இருக்கிறதோ- பிழைத்தேன்!



யாரது? என்னை குறி வைத்து கருப்பு ஒளியை பாய்ச்சுவது யார்-எதற்காக?
ஆனால் அந்நிலையில் காரிகன் செய்யக் கூடியது எதுவும் இல்லை-
அதிர்ஷ்டத்தின் துணையை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய நெருக்கடி-
இம்முறை 'விஷ்' என்ற ஓசையோடு ஏதோ ஒன்று அவரை தாண்டிச் சென்றது-
விஷ்ஷ்ஷ்....
மறுகணம்-கீழிறங்கும் வேகம் இரட்டிப்பாகி விட்ட உண்மை உறைத்தது காரிகனுக்கு-
ஏதாவது மெத்தென்று இருந்து என்னை தாங்கிக் கொண்டால்தான் உண்டு - இல்லையேல் ஒரு எலும்பு கூட மிஞ்சாது!
இன்ப்ரா-ரெட்லைட்டை பயன் படுத்தலாம் என்றால் எதிரி-களுக்கு என்னை அது காட்டிக் கொடுத்து விடும் அபாயமுண்டு-
ஆனால் - எவ்வளவு உயரத்தில் இருக்கிறேன் என்று தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்!


ஒரே ஒரு நொடி மட்டும் லைட்டை போட்டால்-?
அதே கணத்தில்-
ஷ்ஷ்ஷ்ஷ்....
கொலைகாரப் பாவிகளின் செயல் வேகம் படு சூப்பர்- நான் மயிரிழையில் தப்பி விட்டது அதிசயம்!
தரை அருகில் இருக் கிறது-பாரசூட் பழுத டைந்த நிலையில் அதி- ரடியாக விழப் போகி றேன்-
பொத்!
காரிகன் தரைமீது விழுந்த பின் பல மணி நேரம் கழித்து-
அம்ம்மமாாாா....
இன்னமும் உயிரோடுதான்- நான் இருக்கிறேனா-? ஆ-ஆனால்-வலி-தாங்கவில்லை-எலும்பு முறிவு ஏதுமில்லை-ஆச்சரியம்தான்!


பிராணன் போகிறது!
கடக்! கடக்! கடக்!
மூட்டுக்கு மூட்டு வலி-
இங்கேயே இருந்தால் ஆபத்து! போவதற்கு முன் பாரசூட்டை ஆராய்வது அவசியம்!
எங்கே?
ஆங் - இதோ!
அடக் கடவுளே!
சுத்தமாக எரிந்து போயிருக்கிறது - ஸ்டீல் உள்பட! என் எதிரியின் வலிமை பயங்காம்-படு பயங்கரம்!
இதுவரை கேள்விப்படாத சக்திவாய்ந்த ஆயுதங்களோடு காத்திருக்கும் மர்ம எதிரியோடு வெறுங்கையோடு வந்திருக்கும் நான் -
மோதுவது விவேகம் தானா?
என் மூட்டை முடிச்சு அத்தனையும் கோவிந்தா! உடனடியாக புரபஸரின் முகாமை தேடிக்கண்டு பிடிக்காவிடில் விடிவே கிடையாது எனக்கு!


ஆனால்! எங்கே என்று தேடுவது!
சில வேளைகளில் கடினமான பிரச்னைகளுக்கு சுலபமாக வழி கிடைப்பதும் உண்டு-
அங்கே! விளக்கொளி! எனக்கு சமிக்ஞையா?
இல்லை. அடுப்பு எரிகிறது! எனக்கு இது போதுமே!
இருட்டு இன்னமும் விலகாதது என் அதிர்ஷ்டமே- இல்லையேல் அந்தத் தீயை என்னால் பார்த்திருக்க முடியாது!
உணவோ, தண்ணீரோ, காம்பஸோ இல்லாமல்- அங்கே நான் போய்ச் சேர முடியுமா?
உணவு தயார்-
வாருங்கள்- டாடி!
வழக்கம் போல் நாம் கிளம்புவோமா- அல்லது உங்களுடைய உளவாளிக்காக இங்கே காத்திருப்போமா!
வசதிகளோடு தான் வந்திருப்பான்! நாம் போவோம் வந்து சேரட்டும்!
பலமணி நேர கடின பயணத்திற்குப் பின்-
எவ்வளவு தூரம் கடந்திருக்கிறேனோ- தெரியவில்லை ஆனால் ஒன்று- உடனடியாக தண்ணீர் கிடைக்காவிடில் பிறகு எனக்கு அது எப்போதுமே தேவைப்படாது போகலாம்!


காரிகனின் கால்கள் கெஞ்சின-
மீண்டும் தீ தெரிகிறது-ஆனால் தொலைவு என்னவோ குறைந்த தாக தெரியவில்லை!
த-ண்-ணீர்-தண்-ணீ-ர்
புகை நாற்றம்-
அருகே-மிக அருகே!
காணோமே-
டாடி-என் உள்ளுணர்வு ஏதோ சொல்கிறது-
நான் திரும்பி போகிறேன்-ஒரு வேளை ஆரெனாக இருக்கலாம்-
ஆரென்!



ஆரென்-ஓ-டார்லிங்-ஆரென்!
வந்துவிட்டீர்களா?
நீ-நீங்கள்-என் ஆரென் இல்லை!
வேறு யாரோ!
பாவம்-பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது!
இதை குடியுங்கள்-மெள்ள-மெள்ள!
நான் செத்துப்போய் விட்டேனா-இ இது என்ன கனவா?



காரிகன் சுயவுணர்வடைந்து எழுந்ததும்-
டாடி எதிர்பார்த்த உளவாளிதானே நீங்கள்?
அவருடைய மகளா நீ?
ஆமாம்-பெயர்-லின்! உங்களை ஆரெனாக்கும் என்று நினைத்து விட்டேன்!
உன் செத்துப் போன கண-
பட்!
மூடுங்கள் வாயை!
ஸாரி! நீங்கள் அப்படி சொல்லியிருக்கக்கூடாது!
ஆரென் சாகவில்லை! எனக்குத் தெரியும்-
நீங்கள் இங்கே வந்து கிடப்பதை எப்படி உணர்ந்து வந்தேனோ - அப்படி!
ஊகம்! நான் பாரசூட்டில் வந்திறங்கப்போவதை கேள்விப்பட்டிருப்பாயே!
அப்படியில்லை! இது உள்ளுணர்வு!
சொன்னால் புரியாது!


இங்கே உணவு கிடையாது! எல்லாமே புரோட்டீன் மாத்திரைகள் தான்!
இருக்கட்டுமே!
உள்ளே தள்ள கைவசம் தண்ணீர் இருந்தால் என் ஷூவைக்கூட தின்றிருப்பேன்!
சரி- இப்போது சொல- உன் ஆரென் பற்றி!
அவர் அந்த ரஷ்ய முகாமுக்கு போனார்- அது மாயமாக மறைந்த போது அவரும் சேர்ந்து மறைந்துவிட்டார்!
எல்லாம் உங்களால் வந்த வினை!
என்னாலா?
இல்லை!
பின்னே?
உங்களுடைய ஈவிரக்கமற்ற ஏஜென்ஸி!
மேடம்-நான் அந்த ஏஜென்ஸி ஆள் இல்லை!
புழுக வேண்டாம்' அந்த 'அந்நிய வான்வெளி குழுவை கண்காணிக்க நிச்சியமாக ஆரெனை அனுப்பி வைத்தது உங்கள் கூட்டம்தானே!
யாரோ-அல்லது எதுவோ எல்லோரையும் கொண்டு போய்விட்டது!
நீங்கள் இங்கேவந்திருப்பதை அறிந்தால் எதிரிகள் நம்மையும் பலி கொள்ளக் கூடும்-


'நம்மையும் கொன்று விடு வார்கள்' என்று சொன்னீ ருய்! சற்று முன் ஆரென் உயிரோடு இருக்கிருர் என்று சொன்னதும் நீதான்!
எதற்கெடுத்தாலும் விதண்டா வாதம் தான்! உங்களை பேசாமல் சாகவிட்டிருக்கவேண்டும்!
இப்போதுகூட மோசம் போய் விடவில்லை-உன் உதவி இல்லாவிடில் நான்-
போதும் நிறுத்துங்கள்-உள வாளிகும்பலைப் போல் நாங்கள் ஒன்றும் கல் நெஞ்சக்காரர்கள் இல்லை!
நாங்கள் உதவி செய்வோம்-நன்றி சொல்வீர்கள்-அப்புறம் எங்களையே பலிகொடுத்து விடுவீர்கள்-
ஆரெனுக்கு செய்ததைப் போல்!
இப்படிப்பட்ட எண்ணம் கொண்ட நீ அந்த டேப்பை அனுப்பியது ஏன்?
அந்தத் தப்பை நான் ஒரு போதும் செய்யமாட்டேன்! அனுப்பியதுடாடி! ஆரெனை மீட்க அது ஒன்றுதான் வழி என்ருர்!
கொஞ்சம் விபரமாகத் தான் சொல்லேன்-
அதோ அங்கே தெரிகிற எல்லையற்ற பனிமுட்டத்தினுள்ளேவிபரீதமாக ஏதோ இருக்கிறது!
ஒரு படையை எதிர்பார்த்தார் டாடி! ஆனல் பெரும் தலைவர்களோ ஒற்றை மனிதனை-
பாரசூட்டில் உருப்படியாக தரையிறங்கத் தெரியாத கையாலாகாத மடையரை உங்களை-அனுப்பி வைத்திருக்கிருர்கள்!


ஆரென் மீது நீ வைத்துள்ள பற்றுதல் புரிகிறது. நான் மீண்டெழுந்ததும் நிச்சயமாக ஆரெனை மீட்டுத் தருவேன்-
எனக்கு நம்பிக்கையில்லை! சரி சரி- இங்கேயே இருங்கள்! டாடியை அழைத்து வருகிறேன்!
'மீண்டு எழுந்தால்' என்று நான் சொல்லியிருக்க வேண்டுமோ?
அவளுடைய கணவனின் மரணத்திற்கு எங்களுடைய ஏஜென்ஸி தான் பொறுப்பு என்றும் இவர்களிருவரின் சாவிற்கும் நான் காரணமாகி விடுவேனோ என்றும் நினைக்கிற இவள்-
-திரும்பி வருவாளா?
யுகமாக கழிந்தன நிமிடங்கள் பல.பின்னர்-
ஆச்சரியம் தான்!
வருவேனோ என்ற சந்தேகம் இல்லையா?
நாங்கள் உங்களைப் போல் கல்நெஞ்சக்காரர்கள் இல்லை என்று சொன்னேனில்லையா?
உண்மை தான்
ஏய்-லின்!
உயிர் தப்பியது நீ செய்த அதிர்ஷ்டம் சாரிகன். பிரதான முகாமில் உள்ள டாக்டரிடம் உன்னை லின் அழைத்துப் போவாள்!
அவசியமில்லை ஸார்-எலும்பு முறிவு ஏதுமில்லை. ஓரிரு நாள் ஓய்வு போதும்-தேறி விடுவேன்!


அப்புறம் பணியில் முழு மூச்சாக இறங்கிவிடு வேன்! நீங்களும் லின்னும் ஒதுங்கி யே இருப்பது நல்லது!
ஒட்டுமொத்தமாக ஒரு வானிலை முகாமையே விழுங்கி ஏப்பமிட்டு விட்ட சக்தியை தனி மனிதனாக எப்படி நீ சமாளிக்க முடியும்?
நானும் உடன் வருகிறேன் - லின்னை சமாதானப்படுத்தி பிரதான முகா முக்கு அனுப்பி வைப்போம் - ரேடி யோ தொடர்புக்கும், நமக்கு சப்ளை அனுப்பி வைக்கவும் பொறுப் பேற்கட்டும்!
நாட்கள் நகர்ந்தன- காரிகன் தேறி வந்தார்-
இங்கே இந்த குரங்கு அவசியம்தானா? உணவு, தண்ணீர் வீண்!
இதிலுள்ள ஆசாபாசம் உளவாளி ரக ஆசாமி களுக்கு புரியாதுதான்-
நீங்கள் கூடத் தான் போடோவை விட நிறைய-
-சாப்பிடுகிறீர்கள், பருகுகிறீர்கள்!
நெத்தியடி-எனக்கு வேண்டியதுதான்!
ஸாரி வாய்த்துடுக் காக பேசி விட்டேன்!
இல்லை லின்!
என்ன இருந் தாலும்நான் உதவாக் கரை தான்!


ஆனால் இப்போது நான் தேறி விட்டேன். தனியாக முகாம் அமைத்துக் கொள்ளு மளவுக்கு!
உங்களை ரொம்பவும் தான் நோகச் செய்துவிட்டேன் போலிருக்கிறது-
இல்லை-லின்! நாம் கண்காணிக் கப்படுவதாக உறுத்த வில்லையா உனக்கு?
எதிர்ப்பு உரு வாகியிருப் பதை எதிரிகள் அறிந்தால்- அதனால் உனக்கோ உன் தந்தைக்கோ ஆபத்து வருவதை நான் விரும்பவில்லை-
தேவையானவற்றை இரவல் பெற்றுக் கொண்டு அங் கிருந்து விலகி நடந் தார் காரிகன்-
உங்களுடைய முகாமை யும் கூடுதல் உயரத் திற்கு நகர்த்த வேண் டும் என்று தோன்ற வில்லையா-லின்?
என்ன அதிகாரம் தூள் பறக்குது?
இல்லை லின்-இப் பகுதியில் திடீர் வெள்ளம் வருவது சகஜம் என்றறிவேன்- அதனால்தான்-
நல்ல யோசனை தான்- ஆனால் இங்கே மழை பெய்தால்தானே?
அப்படியில்லை லின்! நான் சொல்வதைக் கொஞ்சம் கேள்!
வீண் அலட்டல்! யோசனைக்கு நன்றி!
பிரிந்து சென்ற காரிகன் முழு மூச்சாக பணியில் ஈடுபட்டார்-
ஸ்லாவிக் வானிலை ஆய்வுக்கூடம் இருந்த இடம் இதுதான். அட-
வெப்பம் அதை அழித்திருக்கிறது-
எல்லாமே உருகி விட்டிருக்கிறது-


தொலைந்தேன் -
யாரோ என்னைக் கண்காணிப்பதான உறுத்தல் ஏற்படுகிறது - ஆனாலும் நான் அங்கே போகத்தான் வேண்டும்
ஆனால் இப்படியே போக முடியாது!
நெடிய பயணமாக இருக்கும் போலிருக்கிறது?
முகாமுக்கு சென்று உணவுப் பொருட்களையும், உபகரணங் களையும் மூட்டை கட்டிக்கொள்ள வேண்டும்!
பாதை எதுவும் தென்படுகிறதா?
ஊஹூம் - ஒரே பனிமூட்டம்!
திடீரென கரு மேகங்கள் சூழ்ந்து வருகின்றன -
இங்கே 'மழை பெய்தால் தானே' என்று லின் என்னை மடக்கினாள் -
ஆனால் இதோ பேய் மழை பொழியப் போகிறது - சற்று நேரத்தில் -


டாடி-தொலைவில் புயல் காற்று வீசுகிறது-நாம் முகாமை உயரத்திற்கு கொண்டு போய் விடுவோமா?
காரிகன் உன்னை ரொம்பவும்தான் பயமுறுத்திவிட்டான். வெள்ளம்பாய்ந்தோட வசதி இருக்கிறது!
ஏதோ கெட்டது நடக்கப் போகிறது என்று உள்ளுணர்வு எச்சரிக்கிறது!
லின்! புரபஸர்! சாமான்களை அள்ளி டிரக்கில் போடுங்கள்! ஆபத்து!
வாருங்கள்-மேலே போய் விடுவோம்!
பொறு! எனக்கு உத்தரவிட நீ யார்?
ஏறப் போகிறீர்களா-இல்லையா!
வதைக்காதீர்கள்-விடுங்கள் அவரை!
மெள்ள-மெள்ள-நீங்கள் எங்களை பரலோகம் அனுப்பி விடுவீர்கள் போலிருக்கிறது.
அந்த ஆர்ப்பாட்டம் அர்த்தமற்றது!
என் கணிப்பு தவறாகிப் போனால் மன்னிப்பு கோரத் தயார்!


நீ-நீ சொல்வதும் சரிதானோ? இடி முழக்கம் வலுத்துக் கேட்கிறது!
போடோ!
அது இடிமுழக்கம் இல்லை புரபஸர்-வெள்ளம் பாய்ந்தோடி வரும் ஓசை!
ஐயோ! போடோ அங்கே கட்டிப் போட்டுக் கிடக்கிறது!
போபோபோ-டோ!
போகாதே லின்!
விடு என்னை!
இந்த சாப பூமியில் நான் என் கணவரை இழந்தது போதும். போடோவையும் இழக்கச் சம்மதியேன்!
முட்டாள்தனமாக உயிரை விடப் போகிறாய்!
அதைப்பற்றி கவலையில்லை எனக்கு!
-மடத்தனம் என்று தெரிகின்ற போதிலும்!
அப்படியானால் நானே முயற்சித்துப் பார்க்கிறேன்-!
காரிகன் மரணத்தோடு ஒரு ஓட்டப் பந்தயம் நடத்தலானார்-
நான் அதை மீட்டு வருகிறேன்!
நீ வராதே!


ஒரே வீச்சில் சங்கிலியை அவர் அறுத்ததுதான் தாம தம்.போடோ பாய்ந்து தொற்றிக்கொண்டது அவர் தோள் மீது!
சமத்துடா-பையா!
லின்! நில்! நீ போய் சாதிக் கப் போவது ஏதுமில்லை!
காரிகனை நம்பு!
கணவாயின் மறு கரையில் காரிகன் ஏற முற்பட்ட வேளையில் வெள்ளம் அங்கே பாய்ந்தோடி வந்தது-
ஜீவ மரணப் போராட்டம்!
போடோ! போடோ!
இப்போது சந்தோஷம் தானே!
அவளை மன்னித்துவிடு காரிகன்! அவளுடைய கணவனின் அன்புப் பரிசு அந்தக் குரங்கு!



நீ செய்த காரியம்ஒரு மனிதாப மான வீரச் செயல்.
இல்லே! நான் செய்தது முட் டாள்தனமான காரியம்! இதை நான் செய்திரா விட் டால்அவளே செய்திருப்பாள்! அதனுல் தான்-
பின்னர்!
போடோ ஆரென் தந்துவிட்டுப் போன கடைசி பரிசு-இதை காப்பாற்றித் தந்த உங்களுக்கு நன்றி!
புயல் ஓய்ந்த பிறகு-
சேதம் அதிகமில்லே!
ரேடியோவும், உணவுப் பொருட்களும் டிரக்கில் இருந்ததால் தப்பி விட்டன-
ஆ ஆ ஆ ஆ!
லின்!
ஓர் எலும்புக் கூடு!
லின்-லின்-அழாதே-வீணுக குழம்பிக் கொள்ளாதே! இது-வானிலே ஆராய்ச்சிக் குழுவில் ஒருவராக இருக்கலாம்!
ஆ-ஆரென்னும் அவர்களோடு தானே இருந்தார்!



நிச்சயம் இது அவராக இருக்காது!
ஆதாரம்? உயிரோடு இருந்தால் இந்த ஓராண்டு காலத்தில் என்னைத் தேடி வந்திருக்க மாட்டாரா?
ஹூம்- இனி அழுது பிரயோஜனம்? கசக்கும் உண்மைகளை நான் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்!
இதுதான் புத்திசாலித்தனம்!
சரி-நீங்கள் முகாமுக்கு திரும்புங்கள்- உடனடியாக!
நீங்கள்?!
வெள்ளத்தில் அடித்து வந்த எலும்புக் கூடு பயங்கர உண்மைகளுக்கு சான்று பகர்ந்தது-
இங்கே இருந்து ஆராய்ச்சியை நடத்தப் போகிறேன்-
ஆரெனுக்கு நேர்ந்த கதி உங்களுக்கும் ஏற்படும் அபாயமுண்டு காரிகன்!
ஆரென் மாண்டு விட்டதை இப்போதாவது நீ ஒப்புக் கொள்கிறாயா?
வேறு வழி? அந்த எலும்புக் கூட்டையும், நாசமடைந்து கிடக்கும் அவர்களுடைய முகாமையும் பார்த்த பிறகு நிஜம் புரிகிறது!
அவர்களுடைய மரணத்திற்கு காரணமானவர்கள் இங்குதான் எங்கோ இருக்கக்கூடும்!
தனி நபராக அவர்களை முறியடிக்க உங்களால் முடியுமா? வீணாக உயிரை பணயம் வைக்காதீர்கள்!


உங்களிடம் ஒரு துப்பாக்கி கூட கிடையாதே!
துப்பாக்கிகள் இங்கே பிரயோஜனப்படாது என்று தோன்றுகிறது லின்!
பின்னே?
தெளிவாக சொல்லத் தெரியவில்லை எனக்கு. போகப் போகத்தான் விளங்கும்!
ஆரெனைப் போலவே உங்களுக்கும் பிடிவாத குணம்!
போங்கள்! எப்படியும் போய் செத்துத் தொலையுங்கள்!
ஏன் இந்த பிடிவாதம்-காரிகன்?
எங்களுக்காக இங்கே வந்தீர்கள்-
எனவே, முடிந்த ஒத்தாசை செய்ய வேண்டியது எங் கடமை!
இங்கிருந்து போவது தான் நீங்கள் செய்யும் பெரிய உதவியாக் இருக்கும்!
மாறாக, இங்கே தங்கிவிட தீர்மானித்திருந்தால், மேலே போக ஏதாவது வழி தென்படுகிறதா என்று பார்த்துச் சொல்- இந்தா பைனுகுலர்!



மலையுச்சியை பைனகுலர் மூலம் வின் ஆராய்ந்து கொண்டிருந்த வேளையில், காரில் ஏறிச் சென்று பாதையை ஆராய்ந்தார் காரிகன்-
ஆராய்ந்ததில்-
பாதை முடிவடைகிறது இங்கே இன்னும் ஏகப்பட்ட தொலைவு இடைவெளி இருக்கிறதே!
சற்று கழித்து-
அம்மாடி பயங்கரமான பயணம் போக வேண்டும் போலுள்ளது! நிறையப் பொருட்கள் தேவைப்படும்!
மீண்டும் முகாமில்-
ஓ-காரிகன்! ஒரு வேளை "எதிரிகள்" டிரக் வருவதை கண்டறிந்து உங்களை-
காலையில்-
இவ்வளவும் தேவை என்றால் பிரதான முகாமுக்குத்தான் நீ செல்லவேண்டும் காரிகன்-
நீங்கள் இங்கே ஓய்வெடுங்கள் டாடி-நான் இவரை அழைத்துப் போகிறேன்!
பனிமூட்ட உச்சியை சென்றடைய வழி ஒன்றை நிர்ணயித்திருக்கிறேன் காரிகன். நாம் திரும்பி வந்ததும் அதை உங்களுக்கு காட்டுகிறேன்-
இவையனைத்தும் ஆரெனுடையவை!
வேவையானவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்!
இருளை ஊடுருவிக் காட்டும் கருவி! வாவ்! இதையுமா?



இரவுப் பயணம்-
ஆபத்தான பயணம் இது-காரிகன்!
வேறு வழியில்லை லின்-ஏற்கனவே நேரம் நிறைய வீணாகிவிட்டது!
பனிச் சிகரத்தை பாருங்கள் இவ்வளவு தெளிவாக இதுவரை ஒருபோதும் நான் கண்டதில்லை!
நிறுத்து! இந்தக் கருவி மூலம் பார்ப்போம்!
ஆவ்! என்ன அது?
இருள்-ஊடுருவி' கருவி மூலம் லின்னும் பார்த்தாள்-
தெரிகிறதா?
இ-இது ரஷ்யாவின் புதிய கண்டுபிடிப்பா? இதை வேவு பார்க்கத் தான் ஆரென்னும். இப்போது நீங்களும் அனுப்பப்பட்டீர்களா?
தெரியாமல் என்ன? பிரம்மாண்டமான ஏதோ ஒன்று!
உன் யூகம் தவறு!



என்ன சொல்கிறீர்கள் காரிகன்?
உன் தந்தை அனுப்பிய டேப்பில் வித்தியாசமான குரல் ஒலி கேட்டது- ஆராய்ந்த மொழி வல்லுனர்கள் உலகில் பேசப் படும் மொழி அல்ல அது என்றார்கள்!
நீங்கள் என்ன சொல்கிறீர்கள்!
எதிரிகள் அயல்கிரக வாசிகளாக இருக்கலாம்!
ஐயோ.- அப்படியானால் நம் கதி?
உன் கேள்விக்கு விடை அந்த பனி மலையில் தான் கிடைக்கும்!
அவர்கள் நண்பர்களாக வந்திருக்கலாமில்லையா?
நைச்சியமாக வந்து இறங்குகிறார்கள்! சாட்சிகளை அடியோடு நாசம் செய்கிறார்கள்! இவர்கள் நண்பர்களாக இருக்க முடியுமா?
என்ன செய்ய உத்தேசம்?
உங்களிருவரையும் ஒரு பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு போய் சேர்த்துவிட்டு நான் ஆராய்ச்சியை தொடரப் போகிறேன்!
மலையுச்சிக்கு நீங்கள் தனியாக போகாதீர்கள்!
காரிகன்- உலகிற்கு ரேடியோ மூலம் அபாய எச்சரிக்கை விடுப்போம்!
யாரும் நம்பமாட்டார்கள்- அப்படியே நம்பினாலும் அவர்களால் எவ்வகையில் உதவ முடியும்? இதில் அணு ஆயுதத்தை பிரயோகிக்க முடியுமா என்ன!


அப்படியிருக்க, நீங்கள் என்ன சாதிக்க முடியும்-
-தனி நபராக?
தெரிய வில்லை!
இனிமேல்தான் யோசிக்க வேண்டும்!
நானும் கூட வருகிறேனே?
லின்-
எத்தகைய அரக்கர்கள் எதிரிகள் என்று தெரிந்த பிறகுமா-நீ-
ஆரென் இல்லை- இனி எனக்கு எல்லாமே நீங்கள்தான்!
சரி-அதை உன் தந்தை தீர்மானிக்கட்டும்!
அதுவும் சரிதான்!



காலையில்-
நிஜம்தானா? நம்பவே முடியவில்லையே!
காரிகன் சொல்வது சாத்தியமென்றால் நாம் இங்கே இருப்பது இடைஞ்சல்தான்!
இந்த விவகாரத்தை காரிகனே கவனிக்கட்டும்! நாம் புறப்படுவோம்!
சரி-டாடி!
மறுநாளைய பயணத்திற்கான ஏற்பாடுகள் கவனிக்கப்பட்டன-
விடிந்ததும் முதல் காரியமாக இருவரையும் இங்கிருந்து-
ஹே-யார்-
விழுந்து போ!


ஐயோ-ரோபோக்கள்-
அத்தனையும்
ரோபோக்கள்!
லின்! புரபஸர்!
ஆபத்து! ஓடிப்
போங்கள்!
பிடிபட்டனர்-மூவருமே! கம்ப்யூட்டர் மூளைத்திறனும், செயல் திறனும் கொண்ட ரோபோக்களின் முன் அவர்கள் எம்மாத்திரம்?



பனி மூட்டத்தினூடே-
பயங்கர பயணத்தின் முடிவில்
ஈடிணையற்ற ஓம்ப்ரு இனத்தவர் நாங்கள்- நான்-மிர்-உத்தரவிடுகிறேன்- பணிந்தால் பிழைக்கலாம்!
இந்த விபரீதம் காரிகன் கொஞ்சமும் எதிர்பாராத ஒன்று-
இது- ட்ரூவர்-
என்- உதவியாளர்!
பேசுகிறது! அதுவும் நம் பாஷை!
ஹா!
நான் இதுவரை சந்தித்த ஜந்துக்களில் இவை மிக விநோதமானவை!
ஹா! ஹா! ஹா!
அதன்களின் ஆதி காலத்து உளறல் பாஷையை நாம் பேசுவதைக் கண்டு திகைத்து விட்டன!
எங்களை கொல்லப் போகிறீர்களா!
ஜூலக்ஸ்! இந்த கிரகத்தை ஆராய வந்தோம்-எங்களுடைய விஞ்ஞானிகள் ஆராய உங்களை 'மாதிரி'களாக கொண்டு போகப் போகிறோம்!
ட்ரூவா-இவைகளை விசேஷ கூண்டுகளில் போட்டு அடைத்து வை!


வின்-புரபஸர்- ஒதுங்கிக் கொள்ளுங்கள்!
காரிகன்! வேண்டாம்- கொன்றுவிடுவார்கள் உங்களை!
அந்த சந்தர்ப்பத்தை விட்டால் விமோசனமே கிடையாது என்று துணிந்துவிட்டார் காரிகன்-
ஐயோ கடவுளே என்ன ஆகுமோ?
கொல்ல வேண்டாம் வேடிக்கையை ரசிப்போம்!
வின்னின் குரங்கு கற்றுத் தந்த பாடம் இது-
ரோபோவின் பார்வையை மறைத்து ஆன்டெணாவை வளைத்து சின்னா பின்னம் செய்தார்-


விளைவு!
ரோபோ செயலிழந்து போனது!
பார்த்தீர்களா-மிர்! இந்த ஜந்துக்கள் ஆபத்தானவை! கொன்று விடட்டுமா?
வேண்டாம்-நான் சரணடைகிறேன்!
ஓ-காரிகன்!
வேண்டாம் காரிகன்! விபரீதமாகி விடப்போகிறது!
ஒரு ஒப்பந்தம்-மிர்! எங்களைப் பற்றி விரிவாக நான் சொல்லத் தயார்-உங்களைப் பற்றி நீ விரிவாக சொல்லும் பட்சத்தில்!
உயிரோடு உங்களை ஆராய்வதையே நாங்கள் விரும்புவதால் உன்னை விட்டுவிட்டோம்-மறுபடியும் தொல்லை கொடுத்தால் தீர்த்துக் கட்டிவிடுவோம்-ஜாக்கிரதை!
நோாாா!
விவகாரம் பிடித்த ஜந்து அது! பேசாமல் தீர்த்துக்கட்டி விடலாம்-மிர்!
வே-ண்-டாம்!



இப்போதே தீர்த்துக் கட்டிவிடுவதே மேல்!
வேண்டாம் ட்ருவா! நிறைய தமாஷ் காத்திருக்கிறது! இவனை நம் 'சாம்பியனோடு' மோதவிடுவோம்!
ஏய்-பூவுலக ஜந்துவே!
காரிகன்- என் பெயர்!
உஷ்-கோப மூட்டாதீர்கள்!
கோபமா? ஹா-ஹா-ஹா! காரிகனை ரொம்ப பிடித்திருக்கிறது எனக்கு! எங்கள் 'சாம்பியனை' இவன் வென்றுவிட்டால் பாராட்டும் முதல் நபர் நானாகத்தான் இருப்பேன்!
சாம்பியன்' எங்கே-மிர்? அதுவும் ஒரு ரோபோதானா?
ஆமாம்-சண்டை போட, கொல்ல சிறப்பு பயிற்சி கொடுத்திருக்கிறோம்!
ஆனால் முதலில் எங்கள் விஞ்ஞானிகளுக்கு வாய்ப்பு கொடுக்கத் தீர்மானித்துள்ளேன்!
அவர்களால் இவர்களுக்கு சிறு பாதிப்பு ஏற்பட்டால் கூட பொறுத்துக் கொள்ள மாட்டேன்!
மாருக- இங்கேயே கொன்றுவிடு-



கொல்வதா? சேச்சே! அங்கே ஓம்ப்ருவில் சகல மரியாதைகளுட னும் நடத்தப்படுவீர்கள்!
எங்களை வேறொரு கிரகத் திற்கு கொண்டு செல்லப் போகிறாயா? நாங்கள் செத்துவிட மாட்டோமா!
வீண் பீதி! அயல்கிரகவா-சிகளை பத்திரமான சூழலில் வைத்திருப்போம்-
மிருகக் காட்சி சாலையில் விலங்குகளை நீங்கள் வைத்திருப்பது போல்!
விலங்குகளா?!
ஆனால் நாங்கள் விலங்குகள் அல்லவே?
நீங்கள்தான் புரபஸரா?
பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இங்கே வந்திருக்கி றோம். மானிடர்கள் கொஞ்சமும் மாறவேயில்லை! இன்னமும் விலங்குகளைப் போலவே இருக்கிறீர்கள்!
என்ன-பல்லாயிரம் ஆண்டுகளா?
ஆமாம்!
எப்படி?


உங்களுடைய கற்பனைக் கும் முந்தைய காலத்தில் நாங்களும் உங்களைப் போல் இரத்தமும், சதை யுமாகத்தான் இருந்தோம்-
உடல் மூப்படைந்தது- மூளை சிந்திக்கும் ஆற் றலையும் நினைவாற்ற- லையும் இழந்தது-
எங்களுடைய விஞ்ஞானிகள், உடலும் மூளையும் மூப்படைவதை தடுக்கவும், அழிவற்று சிரஞ்சீவித்தன்மை பெற வும் வழிவகையை கண்டறிந்தனர்-
இங்கே உள்ளவர்களில் நானும், ட்ரூவாவும் மட்டும் இப்படி சிரஞ் சீவித் தன்மை பெற்ற மானிடர் கள். மற்றவர்கள் சாதாரண ரோபோக்கள்-
என் தலையில் தெரிகிறதே ''ஒளி'' - அதுதான் எங்கள் உயிர்!
அப்படியானால் 'சாம்பியன்' ஒரு ரோபோதான் இல்லையா-
ஆமாம்-!
நான் போட்ட நிபந்தனை நினைவிருக்கிறதல்லவா?


நிபந்தனை? ஹா-ஹா-எனக்கு ஒரு அற்ப மானிடன் நிபந்தனை விதிப்பதா?
லின்னையும். புரபஸரையும் பத்திரமானதொரு இடத்திற்கு அனுப்பாவிடில் நான் போட்டியிட மாட்டேன்-
என்ன திமிர்?
ஒப்பந்தம் என்றால் ஒப்பந்தம் தான்!
சொன்னேனில்லையா- இவன் திமிர்பிடித்தவன் என்று!
ஆமாம்- ஆமாம்-
கொண்டு வாருங்கள்- 'சாம்பியனை'!
சில நிமிடங்களுக்குப் பின்-
ஓ-காரிகன்- ஐயா!
'சாம்பியன்'!
காரிகன் சந்திக்க வேண்டிய எதிரி-



சாம்பியன் மீது சிறு கீறலை ஏற்படுத்தக்கூட எவராலும் முடியவில்லை- இதுவரை-
சரி-இந்த சைத்தானை நான் வென்றுவிட்டால்?
வேடிக்கையாக பேசுகிறாய்- காரிகன்!
காரிகன்-வேண்டாம். வாய்ப்பே இல்லை!
மோதலை அப்புறம் வைத்துக் கொள்வோம்-முதலில் சில ஆராய்ச்சிகளை முடித்துவிட நினைக்கிறேன்! ட்ரூவா- கூண்டுகளை வரவழை!
அதையடுத்து தானியங்கி முறையில் சடங்குகள் சில மடமடவென்று நடந்தேறின-
ஒவ்வொரு கட்ட சோதனை முடிவிலும் மீண்டும் கூண்டுகளில் அடைக்கப்பட்டனர்-
தனித்தனியாக!


சோதனைகள் எப்போது முடியும்! போட்டி எப்போது தொடங்கும்!
அந்த 'ரோபோ' மௌனம் சாதித்தது-
பின்னர்-
ஹே-மிர்-என்ன விஷயம்? சோதனைகள் முடியவில்லையா இன்னமும்?
முடிந்து விட்டன!
நல்லது! எங்களை இனி விடுவித்து விடலாமில்லையா?
ஹா-ஹா! அவசரப் படாதே காரிகன்! போட்டி மைதானம் வேகமாக தயாராகி வருகிறது!
பின்னர்- தனிமையில்-
ஓ-உணவு கொண்டு வந்திருக்கிறாயா?
சரி-சரி-வா உள்ளே!
சாப்பாட்டுக்கு முன் நான் சற்று காலாற வெளியே போய்வரலாமா?
வழக்கம் போல் மௌனம் சாதித்தது அந்த ரோபோ!


சட்டென்று போர்வையில் அந்த ரோபோவை போர்த்தி அதன் ஆன்டெனாவையும், விழிகளையும் செயலிழக்கச் செய்தார்-
இங்கேயே இரு-
டிக் டிக் டிக் டிக்
சிக்கிரமே திரும்பி விடுவேன்!
மிகப் பரந்த விண் கலத்தினுள் சுதந்திரமாக உலவினார் காரிகன்-
பெரிய கப்பல் மாதிரி அல்லவோ இருக்கிறது இது!
லின்னும், புரபஸரும் எங்கே அடைக்கப் பட்டிருக்கிறார்களோ?
என் கூக்குரல் அவர்களை எட்டுமோ என்னவோ?
லின்-லின்-
லின்! லின்! லின்!
அந்த ஓலம் ட்ருவாவின் செவியையும் எட்டியதுதான் துரதிர்ஷ்டம்!
காரிகன் இங்கே இருக்கிறேன்!
ட்ருவா-என்ன விஷயம்!
ஆண் விலங்கின் ஓலத்தைக் கேட்டேன்!
காரிகன்! ஓ-அன்பே! நீங்கள் எப்படி-
இங்குள்ள ரோபோக் களுக்கு மூளை காணாது லின்-
இப்படியே தப்பிச் செல்ல முடிந்தால்- போய் விடுங்கள்!
உன்னை விட்டுவிட்டா? போவதானால் உன்னோடுதான் போவேன். இல்லையேல், சேர்ந்தே செத்து மடிவோம்!


உங்களை கொன்று விடுவார்கள்-கிராதகர்கள்!
இல்லை-போட்டியை நடத்துவதில் மிர் ஆர்வமாக இருக்கிறது!
ஆனால் ட்ருவாவின் ஆர்வம் வேறொன்றில்
மின்னல் வேகத்தில் விலகிப் பாய்ந்தார் காரிகன்-
க்ராக்!
குறி தப்பி விட்டது!
ஓடு-அற்ப மானிட ஜந்துவே ஓடு-ஆனால் இங்கே பதுங்க இடமே கிடையாது!
ட்ருவா-நிறுத்து! கப்பலை நாசம் செய்துவிடாதே! இந்த ஜந்துக்களை விட மூடனாக இருக்கிறாயே நீ!
ஆபத்தான ஜந்து இவன்-உடனே கொன்று விடுவது தான் விவேகம்!
அதை தீர்மானிக்க வேண்டியது நான்!
ஒரு சிறு யோசனை! வேண்டுமானால் சாம்பியனுக்குப் பதிலாக ட்ருவா என்னோடு மோதிப் பார்க்கட்டுமே!
மிர்-! நான் தயார்!


போட்டி மைதானத்தை நான் பார்வையிடலாமா?
சாகப் போகும் இடத்தை முன்கூட்டியே பார்க்க ஆசையாக்கும்?
அந்த மைதானத்தை தீவிரமாக ஆராய்ந்தார் காரிகன்-
செங்குத்துப் பாறைகள் குருணை போன்ற மணல் ஈரப் பரப்புகள்-
இவையனைத்தும் எனக்கு ஒத்தாசை செய்யக் கூடும்!
போதும்-எழுந்து வா- பதுங்க இடமே கிடையாது அங்கே
உனக்கும்தான்! சரி-போட்டி நிபந்தனைகளைக் கூறு!
நிபந்தனைகளா? ஊஹூம் நான் நிதானமாக கொடூரமான முறையில் உன்னைக் கொல்வேன். அவ்வளவுதான்!
மன உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவர்கள் நீங்கள் என்றல்லவா நினைத்தேன்!
அவற்றை தூண்டி விட்டது நீதான்- குறிப்பாக வெறுப்பை!
ஓ.கே! என்னுடைய துப்பாக்கியை கொண்டுவரச் சொல்-மிர்!
ஊஹூம்- கிடைக்காது!
இதுதான் உங்கள் நியாயமா? சரியான அழுகுணி ஆட்டம் தான்!


அழுகிறாயா என்ன?
வேறு ஆளைப் பார்! என் நண்பர்களிடம் விடைபெற்றுக்கொள்ள வாவது அனுமதிப்பா யல்லவா?
ஓ.கே.!
வின்-மனம் தளராதே- நான் ட்ருவாவை நிச் சயம் வென்று விடுவேன்!
ட்ருவா? 'சாம்பியன்' என்ன ஆயிற்று? இந்த மாற்றம்- கஷ்டமாயிற்றே?
ஆமாம்! ட்ருவா-சிந்திக் கலாம்-திட்டமிடலாம்- ஒதுங்கலாம்-உலோகத் தானது என்பதோடு ஆயுதங்களும் கொண்டது-
பின்னே ஏன் சம்மதித்தீர்கள்?
காரிகன்-நீங்கள் கொல்லப் பட்டால் அப்புறம் நான் உயிர் வாழவே மாட்டேன்!
ட்ருவா மிர்ருக்கு ஒரு இடைஞ்சல்-எப்படி யாவது ட்ருவாவை நான் ஒழித்துக்கட்டி விட்டால் மிர் நம்மை விடுவித்து அனுப்பி விடலாம்!
காரிகன்! பழைய ஞாபகங்கள் எனக்குத் திரும்புகின்றன! அந்தப் பெண் உன்னை நேசிக் கிறாள்! நீ-?
ஹா! அது பற்றி உனக்கெதற்கு அக்கறை?
நீயும் அவளை நேசிக்கிறாய்!



அந்த மாபெரும் சுவரின் பின்னா லிருந்து இங்கே நடப்பதைதான் கண்டுகளிக்க முடியும்-ஏமாற்றி விடாதே காரிகன்!
என் கையில் ஒரு துப்பாக்கியை கொடுத்துப் பார் தெரியும்!
அரங்கினுள் கால் வைத்தார் காரிகன்-
தந்திரத்தால் மட்டுமே வெல்ல முடியும்!
மறுகணம்-
ஸ் ஸ் ஸ் ஸ் ஸ் ஸ்
ஆவ்-சண்டாளன்!
பாதுகாப்பான நிலையிலிருந்து மிர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது!
பலே-பலே-பிரமாதம் காரிகன்!
தோட்டாக்கள் சரமாரியாக பறந்தன-
மின்னல் வேகத்தில் நகர்ந்து-
பட்!
பட்!
பட்!
-போக்குக் காட்டியவாறு-
பட்!
பட்! பட்!


க்ராக்
அருகே நெருங்கி-
க்ராக்!
அவனுடைய பார்வை வரம்புக்கு உள்ளே புகுந்து-
காரிகன் தூள் கிளப்புகிறான்- ட்ருவா திணறுகிறது-
இப்படி பின்னால் போய்-
கால் இணைப்பினுள் மணலை அள்ளிப் போட்டு-
-விழி அமைப்பின் மீது களிமண்ணைப் பூசி பார்வையை மறைத்து--


அடேய் சைத்தானே-
உலோக கரத்தால் விழி அமைப்பை ட்ருவா துடைக்க முயலவே, கண்ணாடியில் கீறல் ஆழமாக விழுந்தது-
இதுதான் தருணம்- கூடுதலாக மணலையும், களிமண்ணையும் அள்ளிப் போட-
இலக்கின்றி துளாவிய ட்ருவாவின் உலோகக் கரம் காரிகனை பதம் பார்த்தது-
ஓ! இரயில் வந்து மோதியது போல்- அப்பப்பா- என்ன ஒரு அடி- தொடர்ந்து நான் நகர்ந்துகொண்டேயிருக்க வேண்டும்.
அற்ப மானிடப் பதரே- எங்கே தொலைந்தாய்!
க்ராக்!
க்ராக்!


அங்கே மிர்-
காரிகன்! உன் சாதனை பாராட்டிற்குரியது- ஆனாலும் ஏனோ எனக்குள் துயரம் பொங்குகிறது!
இந்தப் பாறை அடைக்கலம் தருமோ?
படீர்!
கரடு முரடான கட்டி கல்! - அவனுடைய மூஞ்சியில் இதை எறிந்தால்-
காரிகன் எறிந்த கல் ட்ருவாவின் விழி அமைப்பை தூள் தூளாக்கியதோடு ஆன்டெனாவையும் பயனற்றதாக்கியது.
ஆ ஆ ஆ ஆ ஆ
விளைவு? - நம்ப முடியாதது!
ட்ருவாவின் மூளை பேதலித்துவிட்டது!
ட்ருவா தறிகெட்டுப் போய்விட்டது!
க்ளிக்! க்ளிக்! க்ளிக்!



மிர் பாய்ந்தோடி வந்தது!
காரிகனை கொன்றுவிடாதே! ட்ருவா-நிறுத்து!
டிக் டிக்
நிறுத்துவதா— நோ-கொல்- கொ-ல்ல்-
பின்னாலிருந்து பாய்ந்தார் காரிகன்-
உப்ப்!
ஆ ஆ ஆ ஆ!
போதும்- நிறுத்து- ட்ருவா!
அதை அவனிடம் சொல-மிர்!
ஆபத்தானவன் என்று சொன்னேன்-நீ கேட்க வில்லை-கேட்கவில்லை- கே-க-ட்-க-வி-ல்-லை கே-ட்!
ஆம் சொன்னாய்!


ட்ருவாவின் கதை முடிந்தது மிர்! இனி நீயும், உதவாக்கரை ரோபோக்களும் தான் மிச்சம்!
ஆம்!
அடுத்து நான் - இல்லையா?
இல்லை! விஞ்ஞானத்தில் எங்களை மிஞ்சி விட்ட உங்களுக்குத் தெரியாத வார்த்தை ஒன்று இங்கே உண்டு!
மனிதாபிமானம்!
உன் ரோபோக்களை கூட்டிக் கொண்டு உடனேபுறப்படு. வேறு ஏதாவது ஒருகிரகத்தில் வைத்துக்கொள் உன் ஆராய்ச்சிகளை!
நியாயமான பேச்சு!
அனைவரையும் கொன்று விட்டோம் என்று எண்ணி விட்டீர்கள் அப்படித்தானே? 'சாம்பியனோடு' இரண்டுபேர் மோதினர்! ஒருவன் செத்து விட்டான். மற்றவன் -
முகாம் ஒன்றிலிருந்த ஜந்துக்களை நாங்கள் சிறைப்படுத்தி வைத்திருப்பது தெரியுமில்லையா?
ஆம்! ரஷ்யர்கள்! ஆனால் ஒரு பிரேதத்தை நாங்கள் பார்க்க நேரிட்ட போது!
படுகாயமடைந்தான்!


ஓ.கே.மிர்- அனைவரையும் நீ இப்போது விடுதலைசெய்ய வேண்டும்!
எல்லோரையுமா? புரபஸர், அவருடைய மகள் உள்படவா?
ஆம்- ஒப்பந்தம் அப்படித் தானே?
காயமடைந்த நபரைப்பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும்!
வேறொரு சிறிய முகாமில் இருந்தான் அவன்- உன் மீது இப்போது நேசமாக இருக்கும் அந்தப் பெண்ணின் பார்ட்னர்!
ஆரென்
ஓ-! ஆரென் உயிரோடிருக்கிறான்-என்ன? லின்னின் உள்ளுணர்வு சொன்னது நிஜமாகிவிட்டது! ஆனால் காயமடைந்திருப்பதாக-
இப்போது குணமடைந்து விட்டான்-ஆனால் ஊனமுற்றவன்!
மிருகங்கள் என்று எங்களை சொன்ன உனக்கு இப்போதாவது எங்களுடைய மன உணர்ச்சிகள் புரிந்ததே!
கேட்க வேதனையாக இருக்கிறதா காரிகன்-
எனக்கு இடைஞ்சலாக இருந்த ட்ருவாவை நீ அழித்துவிட்டாய்.
உனக்கு இடைஞ்சலாக முளைத்துவிட்ட ஆரெனை நான் சத்தமில்லாமல் அழித்துவிடட்டுமா?


நன்றிக் கடனாக நான் அதை செய்யத் தயார்!
உன் கணக்கு சரி தான் மிர்- ஆனால் நான் அதற்கு சம்மதியேன்!
எதற்கும் அந்தப் பெண்ணை கலந்தாலோசித் துச் சொல்!
அவளும் இதே பதிலைத்தான் சொல்வாள்!
உங்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை விநோதமான ஜீவராசி களாக இருக்கிறீர்கள்!
காவலர்களே! எல்லா கைதி களையும் மைதானத்திற்கு அழைத்து வாருங்கள்!
ஓ.கே-!
புரபஸரும், லின்னும் கூட்டத்தில் இருந்தனர்!
டாடி-காரிகனை தேடுங்கள்-
?



ஆ ஆ ஆரெரென்ன்
விடுதலையாகி வெளிவந்த கைதிகளில் ஆரெனும் இருந்தான்-
ஓ-ஆரென்! நீங்-நீங்கள் செத்துவிட்டதாக-
நினைத்தீர்களாக்கும்! ஆமாம்-ஒருவருடம் கண்ணில் படவில்லை என்னும்போது அப்படித்தான் நினைக்கத் தோன்றும்-
அழாதே-லின் நான்தான் வந்துவிட்டேனே!
கை ஒன்றை இழந்துவிட்டேன் லின்! ஆனால் உன் மீதுள்ள அன்பு இன்னும் அப்படியே தான் உள்ளது!
மானிடர்களே-உங்கள் அனைவரையும் விடுதலை செய்கிறேன்-
உங்கள் பொருட்டு எங்கள் வீரனை காரிகன வீழ்த்தியதற்கு பரிசாக!
ஆயுதபாணி ரோபோவை நீ வென்றாயா?
அதிர்ஷ்டக் காரன் நீ!
அதிர்ஷ்டத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?


ஆண் ஜந்துக்கள் எல்லோரும் என்னோடு வாருங்கள். உங்களது உடைமைகளை திருப்பித் தருகிறேன்!
பெண்ணே- நீ காத்திரு!
ஆரென் உயிரோடு தான் இருப்பதாக நீ சொன்னது சரியாகி விட்டது லின்!
ஆனால்- ஆனால்- என் மனம் இரண்டும் கெட்டானாக அவஸ்தைப்படுகிறது காரிகன்-
பிரேதத்தை நாம் பார்த்தபோது ஆரென் மாண்டு விட்டதாக நம்பிவிட்டேன்-
நீங்கள் காட்டிய பரிவில் உங்களிடம் மனத்தை பறிகொடுத்தேன்!
இப்போது அவர் திரும்பி வந்து விட்டார்- ஊன்முற்று! எனவே நான்-நான்-
புரிகிறது லின்- எதுவும் நம் கையில் இல்லை!
போட்டியில் வென்றேன்- ஆனால் உன்னை இழந்து விட்டேன்!
உனக்காக உள்ளுக்குள் ஊமையாய் அழுகிறது என் நெஞ்சம்!
இந்த கடைசி சந்திப்புக்கு வாய்ப்பு கொடுத்தமிர்ருக்கு நன்றி!
நீ எங்கிருந்தாலும் சந்தோஷமாக வாழ வாழ்த்துகிறேன் லின்- சென்று வா!


நாங்கள் உங்களை பிடித்த இடத்திலேயே கொண்டுபோய் விடச் சொல்கிறேன்!
-ஏறுங்கள் அந்த ராக்கெட்டில்!
காரிகன்-
நீயும் எங்களோடு ஓம்ப்ருவுக்கு வா!
நோ-அவரை விட்டு விடு! ஒப்பந்தத்தை மறந்து விடாதே!
பெண்ணே- அழைப்பு விடுத்தேன்- அவ்வளவு தான்!
அங்கே என்றென்றும் சிரஞ்சீவியாக வாழலாம் என்று மிர் ஆசைகாட்டியது-லின்னுடனான காதல் முறிவுற்ற பின் இன்னும் என்ன தயக்கம் என்று வாதிட்டது-
என்ன சொல்கிறாய்?
அரிய வாய்ப்புத்தான்- வார்த்தையில் நன்றி சொல்லித்தீராது. ஆனால்-எனக்கு இஷ்டமில்லை!
லின் இவர்கள் உன்னை அங்கே இறக்கியதும் ஆரெனை பிரதான முகாமுக்கு கொண்டு போ-நானும் காரிகனும் திரும்ப ஒரு ஹெலிகாப்டரை அனுப்பி வை!
மிர்ரின் கலம் கிளம்பிச் செல்வதை காண விழைகிறேன்!


காரிகன் உங்களைவிட்டு செல்கிறேன்! என் இக்கட்டான நிலைமை புரிகிறதல்லவா?
லின்! பிரிவு ஒரு சுகமான துக்கம் என்பார்கள். ஆனால் எனக்குள் மிஞ்சியிருப்பது துக்கம் மட்டும் தான்! உன் நிலை தெளிவாகப் புரிகிறது! குட் பை!
காரிகன்!
ஆரென்!
உங்களை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை-
அன்பு, காதல், தியாகம் போன்ற உணர்வுகளை உங்களை ஆட்டிப் படைக்கின்றன-
இந்த பூவுலகம் சரிப்பட்டு வராது என்று ஓம்ப்ருவில் சொல்வேன்- வேறு கிரகத்தில்தான் நாங்கள் தேடிச்செல்ல வேண்டும்!
உன்னிடமிருந்து அரிய பொக்கிஷத்தை பிரித்தெடுத்துச் சென்ற ஆரெனோடு கை குலுக்கிய நீ-
உனக்காக அனைத்தையும் விட்டுச் செல்லும் என்னோடும் கைகுலுக்க முன்வருவாயல்லவா?
விஞ்ஞானமும், மனிதாபிமானமும் ஒரு கணம் இணைந்தன!


ராக்கெட் திரும்பி வந்தடைந்தது-
அப்படியே ராட்சஸ விண்கலத் தினுள் புகுந்து மறைந்தது-
மிர் கலத்தில் ஏறியது-
இங்கே இருந்து பார்ப் பதில் ஆபத்தில்லை என்று மிர் சொன்னது-
தானே இயங்கும் சக்தி வாய்ந்த கலம் அது!
கொடுத்த வாக்குறுதியின்படி மிர் இனி பூமியின் பக்கமே தலைகாட்டாது- இல்லையா?
ஆமாம்!
விர்ரூம்....
விர்ரென்று ஓசையோடு ஜிவ் வென்று மேலெழும்பியது அந்த விண்கலம்!




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளியிடு-பவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374, சிவகாசி-626123. .:போன்: 20649, வெளியீடு எண்: 80.
அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவ்காசி-626123. போன்: 21159



# வாசகர் கடிதம்!



★ எல். வெங்கடேஸ்வரன். சா அய்யம்பாளையம்.

'Operation அலாவுதீன்' விறுவிறுப்பாகச் சென்றது. கதையில் வரும் சிறுவன் அலி எங்கள் மனதில் இடம் பிடித்துவிட்டான். அதிரடி ஏஜண்ட் சாரி-களை வரவேற்கிறேன். எங்கள் அபிமான ஸ்பைடர், இரட்டை வேட்டையர் கதைகள் வந்து ஒரு வருடமாகி விட்டது. அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு கொடுக்கவும்.

★ பாரதி நந்தீஸ்வரன். குமாரபாளையம்.

ரிப் கெர்பியையும், ஷாரியையும் உயிரோடு சமாதி வைப்பதும். அதிலிருந்து தப்பிப் பிழைப்பதும் படு அசத்தல். கடைசியில் கெர்பியும் ஷாரியும் பிரிந்து செல்வது நெஞ்சைக் கனமாக்கிறது. அருமையான கதை.

★ மதுக்கூர் ரமேஷ், மதுக்கூர்.

திகில், மர்மம், மயிர்கூச்சரிக்கும் காட்சிகள் என்று எல்லா விதங்களிலும் எங்கள் மனதை நிறைவடையச் செய்தது. துப்பறியும் சிங்கம் C. I. D. ரிப்கிர்பி தோன்றிய 'Operation அலாவுதீன்!'

★ மதுகை த. சரவணன். மதுக்கூர்

தலைப்பு புராணக்கதைபோல் இருந்தாலும் ரிப்கிர்பியின் சாகஸம் அற்புதம். கிர்பியும், ஷாரியும், மரணத்தின் பிடியில் அப்பப்பா.....என்ன பயங்கரம்.

★ ஏ. வி. பிரசாந்த், சென்னை 91.

கதை ஜெட் வேகத்தில் பக்கத்திற்கு பக்கம் விறுவிறுப்பாக அமைந்திருந்தது. கதையின்-சிறப்புக்கு முத்திரை அட்டைப்படம். கதை காமெடியாகவும், சஸ்பென்ஸாகவும் அற்புதமாக இருந்தது.

# ரூ.5000 பரிசு!



டியர் ரீடர்ஸ்,

ரூ. 5000/- பரிசுப் போட்டியில் வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகளின் விபரம் பின்வருமாறு:

1) லெ. வெங்கடேஸ்வரன்,
சா. அய்யம்பாளையம் (P.O.)
மண்ணச்சநல்லூர் (VIA)
(திருச்சி *dt* )-621 005.

2) பொன். கார்த்திகா தேவி,
கட்டளைப்பட்டி (P.O.)
ஆனையூர் (*Via*)

3) **Ms. J. E. Reena,**
*56. Peramanoor Kamaraj MPL* காலனி,
**Salem**-*636 007*.

4) *M*. சக்தி,
126/2, மேட்டுத் தெரு,
அயன்புரம், சென்னை-23.

5) *P*. அனந்தகிருஷ்ணன்,
*S/o. G* பழனிச்சாமி,
ஆவல்நாயக்கன்பட்டி, காக்கங்கரை(P.O.)
திருப்பத்தூர் (*T k.*)

6) *S*. சுப்ரமணியன்,
90, இரண்டாம் தெரு,
முத்துக்கிருஷ்ணபுரம்,
தூத்துக்குடி-628 001.

7) *A*. முத்து,
145 10, T. K. ரோடு,
சென்னை-81.

8) *K*. சுபாஷ்,
265, சுதர்சன் காலனி,
தானே, பம்பாய்-62.

9) *M*. பிரசாத்,
திருப்பாலைவனம் (P.O.)
பொன்னேரி (T. K.)
செங்கை *M G. R.-dt.*

10) *A*. சஞ்சீவி,
அரியன்குளம் (P.O.)
சிவகிரி

வெற்றி பெற்ற **10** வாசகர்களுக்கும் ரூ. 500/- விலையிலான **Titan** கைக்கடிகாரங்களை பதிவுத் தபாலில் அனுப்பியுள்ளோம்!

குலுக்கலில் பங்கேற்ற மற்ற வாசகர்களுக்கு இம்மாத லயன், திகில், மினி லயன் புத்தகங்கள் அன்பளிப்பாக அனுப்பியுள்ளோம்!

அறிமுகம்!

# லயன் புக் க்ளப்!

## ★ புக் க்ளப் என்றால் என்ன?

மாதந்தோறும் நமது நிறுவனத்திலிருந்து நான்கு காமிக்ஸ்கள் வெளிவருகின்றன. (லயன், திகில், மினிலயன் & முத்து காமிக்ஸ்) உங்கள் ஊரில் சரியான சமயத்தில் நமது புத்தகங்கள் கிடைக்காவிட்டாலோ-சீக்கிரமே விற்றுத் தீர்ந்துவிடுவதாலோ உங்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கவே இந்த ஏற்பாடு!

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இது தான்! ரூ. 10/- கட்டி க்ளப் மெம்பராக சேர்ந்துவிட்டால் மாதா மாதம் உங்கள் வீடு தேடி 4 புக்குகளும் V. P. P.ல் வரும். போஸ்ட் மேனிடம் பணம் செலுத்தி பார்சலை நீங்கள் பெற்றுக் கொண்டால் போதும்!

இனி புத்தகங்களைத் தேடி கால் கடுக்க கடைகளுக்கு அலைய வேண்டியதில்லை! அதே போல் சந்தா மூலம் பிரதிகளைப் பெற்று வரும் வாசகர்களுக்கும் புக்குகள் தபாலில் தொலைந்து போகும் தலைவலி இனி கிடையாது!

ஆகையால் இன்றே ரூ. 10/- செலுத்தி புக் க்ளப்பின் மெம்பராக பதிவு செய்துகொள்ளுங்கள்! உங்கள் அபிமான கதாநாயகர்கள் உங்கள் வீடு தேடி வருவார்கள்!

ஆமாம்! லயன் புக் க்ளப்பின் மெம்பராக சேர நான் விரும்புகிறேன். மாதந்தோறும் எனக்கு அனுப்பப்படும் V. P. பார்சல்களை ஏற்றுக் கொள்ள உறுதியளிக்கிறேன்.

பெயர் : ______________________

முகவரி : ______________________

______________________

______________________

தபால் நிலையம் : ____________ பின்கோடு நம்பர் ____________

இக்கூப்பனுடன் ரூ. 10/-க்கான மணி ஆர்டர்/ஸ்டாம்புகள் அனுப்பியுள்ளேன்.

______________

கையெழுத்து.




வருகிறது!
மினி
லயன்
விண்டர் ஸ்பெஷல்!
விலை ரூ. 3/-




Regd. No: TN/VR/29 R. N. 49613/87